மலர் : 16 சுற்றுமடல் செப்டம்பர் – டிசம்பர் 2025

மாண்ட்போர்த்துவ

# நண்பன்

MGA

MONTFORTIAN GABRIELITE ASSOCIATES

'அன்னை மரியாள் வழியாக மீட்பைத் தேடும் மனிதகுலம் !'

உலக அமைதிக்காகவும் நம் ஒவ்வொருவரின்
இதய அமைதிக்காகவும் ஜெபிப்போம்!










Let us Pray for Peace in the World
and Peace in Each of our Hearts!



MONTFORT BROTHERS OF ST. GABRIEL

PROVINCE OF TRICHY

FOR PRIVATE CIRCULATION ONLY

தனிச்சுற்றுக்கு மட்டும்

# HOLY MARY SEAT OF WISDOM
## PRAY FOR US!



புனித மரியே ஞானத்தின் இருப்பிடமே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!

**ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது.**
**என் மீட்பராம் கடவுளை நினைத்து**
**எனது மனம் பேருவகை கொள்கின்றது.**

**My soul proclaims the greatness of the Lord**
**And my spirit rejoices in God my Saviour.**

## பொருளடக்கம் / Content


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| 01. **தலையங்கம்**<br>Editorial by Mr. Bosco Amalorpavam | 02 |
| 02. **தலைமை சகோதரரின் சிந்தனைகள்**<br>Reflections by Rev. Bro. A. John Britto, S.G. (Provincial) | 04 |
| 03. **திருவருகைக் காலம்**<br>Article by Mrs. S. Delsi | 08 |
| 04. **You are Eternal**<br>Article by Rev. Fr. Leonard, CSC | 12 |
| 05. **Friends of the Cross**<br>Article by Rev. Bro. S. Jesu Raja, S.G. | 14 |
| 06. **An Impulse from you Oh Lord**<br>Lyric by Rev. Bro. P.J. Emmanuel, S.G. | 17 |
| 07. **ஆண்டவருக்காகப் போராடுங்கள்**<br>Article by Mr. M. Leo Charles | 18 |
| 08. **திருச்சிலுவையின் மகிமை விழா**<br>Article by Sr. I. Preethi Teresa | 23 |
| 09. **செசோன் பாலத்தில் எதிர்நோக்கின் பயணம்**<br>Article by Master I. Rinis | 27 |
| 10. **Abandoning Society**<br>Article by Master S. Akilesh Infant | 28 |
| 11. **Open to Jesus Christ**<br>Article by Master J. Rishon | 30 |
| 12. **Jubliee Felicitation Song**<br>Lyric and Music by Rev. Bro. A. Charles, S.G. | 32 |

**தலையங்கம்** *Editorial*

# இதோ நான் இருக்கிறேன், ஆண்டவரே !

கர்தினால் ராபர்ட் பிரான்சிஸ் பிரெவோஸ்ட்டிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. "கர்தினால்களின் வாக்குரிமையால் கடவுளின் விருப்பம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. திருத்தந்தையாக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் இந்தத் தேர்தல் முடிவை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?" ஒரு சிறிய மௌனத்திற்குப்பின் அவரது பதில், "ஆம் இறைவனின் பெயரால் ஏற்றுக்கொள்கிறேன்" அந்த சிறிய மௌனத்தில்... கடவுளிடமிருந்து அவருக்கு வந்த அழைப்பும், அதற்கு அவருடைய பதிலும் அசைவாடிக்கொண்டிருந்தது.

கர்தினால், திருத்தந்தை 14ஆம் லியோவாக பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்!

ஒரு நான்கு எளிய வார்த்தைகள் திருத்தந்தையின் மனதில் ஒலித்திருக்கவேண்டும்.

"இதோ நான் இருக்கிறேன், ஆண்டவரே" (ஏசாயா 6:8)

இவைதான் கடவுளின் அழைப்பிற்கு, திருத்தந்தையின் பதிலுரையாக ஒலித்திருக்கவேண்டும்!

திருத்தந்தைக்கு மட்டுமல்ல... நம் எல்லோருக்கும் ஒரு அழைப்பு கடவுளிடமிருந்து வந்துகொண்டேயிருக்கிறது.

கடவுளிடமிருந்து அழைப்பு... இடிமுழக்கமான கம்பீரமான குரலுடன் அல்ல!

ஆனால் ஒரு மென்மையான, ஊடுருவும் ஓர் அழைப்பு அது! அது நம் ஆன்மாவைத் தொடுகிற அழைப்பு... வற்புறுத்தும் குரலில் இருப்பதில்லை. அன்பாய் அழைக்கிறது... ஆனால் சவாலானது!

அந்த சவாலான அழைப்பு அன்னை மரியாவிற்கும் தரப்பட்டது. "இது எங்ஙனம் ஆகும்?" என்ற மரியாவின் கேள்வி தன்னைப்பற்றிய தன் நலத்தில் எழுந்தது... அப்படியே ஆகட்டும்... நான் உமது அடிமை என்ற அன்னையின் பதில் உலகத்தின் மீதிருந்த அக்கறையில்... பொது நலத்தில் எழுந்தது...

கடவுளின் அழைப்பிற்கு "இதோ நான் இருக்கிறேன். ஆண்டவரே" என்ற அன்னையின் அத்தகைய பதிலில்தான் மீட்பு பிறந்தது!

நமக்கு, நம் வாழ்க்கை, தேடிச் சோறு நிதம் தின்று, பல சின்னஞ்சிறு கதைகள் பேசி, உண்டு, உறங்கி, இடர் செய்து, செத்திடும் கடிவாளமிட்ட குதிரைகளைப்போல பயணிக்கிறது!

கடவுளின் அழைப்பைக் கேட்க நம் கடிவாளங்களை கழற்ற வேண்டும்! நம் விழிகளின் பார்வையை 360° கோணத்தில் சுழற்ற வேண்டும்!

இன்றைய உலகம் பெரும்பாலும் எதிர்மறைகளால் சுழன்று கொண்டிருக்கிறது... ஆயுத மோதல்கள், சுற்றுச்சூழல் நெருக்கடிகள், சமூக ஏற்றத்தாழ்வுகளால் ஆணவ உயிர்பறிப்புகள், வளர்ந்து வரும் தனிமை, எதையும் தாங்கக்கூடிய திறன் இழப்பால் உயிர்மாய்த்தல், நம்பிக்கையற்றத்தனத்தில் வாழ்க்கை!

‘இன்றைய உலகம்’ என்பது நாம்தானே! இதில் வாழும் நம்மை, நம்மைச் சுற்றியுள்ள சமூகத்தை ‘கவனிக்க’த்தான் கடவுள் நம்மை அழைக்கிறார்.

முதலாவதாக சமூக நிலைப்பாட்டினை புரிந்துகொள்ள அழைக்கிறார்.

இரண்டாவதாக நாமும் இத்தகைய எதிர்மறைச் சிந்தனைகளிலிருந்து விடுபட்டு நம் நேர்மறை நிலைப்பாட்டினை முன்வைக்க அழைக்கிறார்.

மூன்றாவதும் கடைசியுமாக, நாம் முன்வைத்ததை, நம் வாழ்நாள் முழுவதும் சக மனிதர்களுக்காக ‘செயல்பட’ அழைக்கிறார்.

நம் புனிதர் லூயி மரி மாண்ட்போர்ட்டும் கடவுளின் அழைப்பை ஏற்றதால்தான், நோயாளி ஒருவரை தன் தோளில் தூக்கிக்கொண்டு ‘இயேசுவுக்கு கதவைத் திறங்கள்’ என்றார்.

இதோ... கடவுள் நம்மை அழைக்கிறார்... நம் பதில் இவ்வாறாக இருக்கட்டும்.

“இதோ நான் இருக்கிறேன்... ஆண்டவரே!”

**திரு. போஸ்கோ அமலோற்பவம்,**
மாண்ட்போர்த்துவ கபிரியேல் நண்பர்கள் ஆணைய உறுப்பினர்,
திருச்சி மாநிலம்.

# தலைமை சகோதரரின் சிந்தனைகள்...

அனைவருக்கும் அன்பு நிறைந்த வாழ்த்துகள்.



'மீட்பரை உங்களுக்கு வழங்குவேன்' என்ற கடவுள் அளித்த வாக்குறுதியின் நிறைவேற்றத்தைக் குறிக்கும் கிறிஸ்துவின் பிறப்பிற்காக நாம் ஆவலுடன் காத்திருக்கும்போது ஜெபம், சிந்தனை மற்றும் தொண்டு இவற்றின் மூலம் ஆழமான ஆன்மிக தயாரிப்புக்கு அழைக்கப்படுகிறோம். இயேசு சிதைந்த உலகத்திற்கு அமைதி, நம்பிக்கை மற்றும் மீட்பைக் கொண்டுவர வந்தார். ஒரு தொட்டிலில் அவரது தாழ்மையான பிறப்பு, எளிமை மற்றும் பணிவின் மதிப்பீடுகளை எடுத்துக்காட்டுகிறது. கிறிஸ்து மனிதகுலத்திற்கும் கடவுளுக்கும் இடையிலான இடைவெளியை இணைக்கிறார். அன்பின் மூலம் நம்மை மீட்டெடுக்கிறார். பாவத்தாலும் நம்பிக்கை இழப்பாலும் இருளடைந்த உலகிற்கு அவர் ஒளியைக் கொண்டு வந்தார். கிறிஸ்து மனிதனாய் அவதரித்தது 'கடவுள் நம்முடன் இருக்கிறார்' என்பதற்கான மிகப் பெரிய அடையாளம். நாம் நம்பிக்கை மற்றும் அன்பு நிறைந்த இதயத்தோடு பணிபுரிய கிறிஸ்துமஸ் 2025-யூபிலி ஆண்டு-நிறைவு நம்மை அழைக்கின்றது.

கடவுள் எப்பொழுதுமே அமைதியின் கடவுளாகத் திகழ்கிறார். அவர் தம் மக்கள் அமைதியாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறார். ஏசாயா தீர்க்கதரிசி இவ்வாறு கூறுகிறார்; 'நமக்காக ஒரு குழந்தை பிறந்துள்ளார். அவருடைய பெயர் வியத்தகு ஆலோசகர், வல்லமைமிக்க கடவுள், என்றுமுள தந்தை மற்றும் அமைதியின் அரசர்.' (ஏசாயா 9-6). ஆனால் இயேசு கிறிஸ்து அமைதியின் அரசர் என்பதை நினைவில்கொள்ள, இடைநிறுத்தப்படும் ஓர் உலகில், நாம் சிக்கிக் கொள்கிறோம். மோதல்கள் மூலம் அல்லாமல், அமைதி மற்றும் ஒத்துழைப்பு மூலம்தான் நாடுகள் வளரமுடியும் என்பதை நமது உலகத் தலைவர்கள் அங்கீகரிக்கத் தவறிவிடுகிறார்கள்.

எனவே உலகினில் அமைதி இல்லாமல், பயம், வன்முறை மற்றும் வெறுப்பு ஆகியவற்றால் உலக மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். உலக அமைதி ஒவ்வொரு மனிதனின் பாதுகாப்பையும் கண்ணியத்தையும் உறுதி செய்கிறது. அமைதி மற்றும் சமாதானம் போன்றவற்றால் மட்டுமே நீதி, சமத்துவம் மற்றும் பரஸ்பர மரியாதை வளரமுடியும். எல்லாவற்றிற்கும் மேலாக கல்வி மற்றும் வளர்ச்சி செழிக்கக்கூடிய சூழலை இவை மட்டுமே உருவாக்கமுடியும்.

அமைதி நிறைந்த கலாச்சாரங்கள் மதங்களுக்கிடையில் உரையாடல் மற்றும் புரிதலை ஊக்குவிக்கின்றன. போரினால் ஏற்படும் அழிவைக் குறைப்பதன் மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அமைதி உதவுகிறது. இது உண்மையான முன்னேற்றத்திற்கும் நீடித்த மகிழ்ச்சிக்கும் அடித்தளமாகும். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக பிளவுபட்ட உலகில், சமாதானம் செய்பவர்களாக இருக்க அழைக்கப்படுகிறோம்.

2025-யூபிலி ஆண்டு நிறைவு, அருள் மற்றும் கருணையின் புனிதமான நேரத்தைக் குறிக்கிறது. இது நம்பிக்கையாளர்களை கிறிஸ்துவின் மகிழ்ச்சியையும் நற்செய்தியையும் மீண்டும் கண்டுணர்ந்து செயல்பட அழைத்துள்ளது. உலகெங்கிலும் உள்ள திருப்பயணிகள் மன்னிப்பு மற்றும் அமைதியைத் தேடி எதிர்நோக்குடன் பயணிக்க உதவுகிறது. யூபிலி நமக்கு கடவுளின் எல்லையற்ற கருணை மற்றும் நிபந்தனையற்ற அன்பை நினைவூட்டியுள்ளது. காயங்களை குணப்படுத்தவும், மற்றவர்களை மன்னித்து ஏற்றுக்கொண்டு வாழவும் நமது பணியைப் புதுப்பிக்கும் தருணமாகவும் அமைகிறது.

புனித கதவுகளின் திறப்பு, திறந்த இதயங்களை குறிப்பவையாகவும் மற்றும் புதிய தொடக்கங்களின் சின்னங்களாகவும் இருந்தன. உடைந்த மற்றும் பிளவுபட்ட உலகில் நம்பிக்கையின் சாட்சிகளாக இருக்க நாம் அழைக்கப்பட்டோம். பிறரன்புப் பணிகள் மற்றும் இரக்கத்தின் செயல்கள் கிறிஸ்துவைக் கொண்டாடுவதற்கான நமது வழியாக மாறி இருக்கின்றன. யூபிலி ஆண்டு நிறைவடையும்போது, அதன் உணர்வை நம் அன்றாட வாழ்வில் கொண்டுசெல்வோம். கிறிஸ்துவுடன் தொடர்ந்து நடந்து, பூமியின் எல்லைகள்வரை அவரது அன்பை அறிவிப்போம்.

நாம் அன்னை மரியாளிடம் தொடர்ந்து ஜெபமாலை ஜெபிப்போம், அவர் நம் வாழ்க்கையின் அமைதிக்காகவும் உலகின் அமைதிக்காகவும் அமைதியின் இளவரசரிடம் பரிந்துரை ஜெபம் செய்து அருள்வரங்களைப் பெற்றுக் கொடுப்பார்.

***அனைவருக்கும் மகிழ்ச்சி நீறைந்த***
***கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!***

**இறைவன் உங்கள் அனைவரையும் ஆசிர்வதிப்பாராக!**

Dear Associates, Friends and Brothers,

Prayerful greetings from Villa Montfort!

As we are eagerly waiting for the Christ's birth which marks the fulfilment of God's promise of a Saviour, we are invited for a deeper spiritual preparation through prayer, reflection, and charity. Jesus came to bring peace, hope, and salvation to a broken world. His humble birth in a manger highlights the value of simplicity and humility. Christ bridges the gap between humanity and God, reconciling us through love. He brought light into a world darkened by sin and despair. The incarnation of Christ is the greatest sign of Emmanuel-"God with us." At the close of the Jubilee year Christmas 2025 – a beacon of hope invites us to open our hearts to faith, love and service.

God is always a God of Peace. He wants his people to be peaceful. Prophet Isaiah thus says, " For a Child is given to us, his name will be Wonderful Counsellor, Mighty God, Everlasting Father and Prince of Peace" (Is 9-6). Unfortunately, we are caught up in a world that is pausing to remember that Christ is the Prince of Peace. Our world leaders fail to recognise that world peace ensures the safety and dignity of every human being and allows nations to grow through cooperation, not conflict.

Peace promotes justice, equality, and mutual respect and above all it creates an environment where education and development can flourish. Without peace, fear, violence, and hatred dominate the society. Peace encourages dialogue and understanding among cultures and religions. It helps to protect the environment by reducing war-driven destruction. It is the foundation for true progress and lasting happiness. As followers of Christ, we are called to be peacemakers in a divided world.

The Jubilee Year 2025 marks a sacred time of renewal, grace, and mercy. It has invited the faithful to rediscover the joy of Christ and the Gospel. Pilgrims across the world have journeyed in faith, seeking forgiveness and peace. The Jubilee has reminded us of God's infinite mercy and unconditional love. It was a time to heal wounds, reconcile with others, and renew our mission.

The Holy Doors were symbols of open hearts and new beginnings. We were called to be witnesses of hope in a broken and divided world. Acts of charity and compassion have become our way of celebrating Christ. As the Jubilee closes, we carry its spirit into our daily lives. Let us continue to walk with Christ, proclaiming His love to the ends of the earth.

Let's look up to our Mother Mary and pray the Rosary that she may intercede the Prince of Peace for Peace in our lives and in the world.

***Merry Christmas and Joyful New Year!***
***May God bless you all!***

In Christ,
**Rev. Bro. A. John Britto, sg**
Provincial Superior.

Nanban Magazine edited by : Montfortian Gabrielite Associates Commission, Trichy Province.
**Bro. I. John Xavier, s.g., Bro. M. James William, s.g., Bro. S. Jesu Raja, s.g., Mr. L. Arokiadoss, Mr. A. Bosco and Mr. M. Asin Thangaraj.**
Released by : **Montfort Brothers of St. Gabriel, Province of Trichy.**

# திருவருகைக் காலம்

**முன்னுரை**: டிசம்பர் மாதம் என்றாலே சட்டென்று நம் நினைவில் எழுவது கிறிஸ்து பிறப்பு பெருவிழாக் கொண்டாட்டமும், அதன் தயாரிப்புமான திருவருகைக் காலமும்தான். திருவருகைக்காலம் பெயரிலேயே அதன் உன்னதமும், புனிதமும் வெளிப்படுகிறது. **இக்காலம் திரு அவையின் வழிபாட்டு ஆண்டின் முதல் காலம்.**

★ ஆண்டவர் இயேசுவின் வருகையை

(i) இயேசு வந்தார் – எனவே அவருக்கு நன்றி சொல்ல....

(ii) இயேசு வருகின்றார் – எனவே அவரை வரவேற்க....

(iii) இயேசு மீண்டும் வருவார் – எனவே அவரை எதிர்நோக்கி காத்திருக்க....

என மூன்று நிலைகளில் சிந்தித்து, அதற்கான தயாரிப்புகளை மேற்கொள்ளத் தூண்டும் காலம்; கிறிஸ்து பிறப்பின் உண்மைப் பொருளை உணரச் செய்யும் காலம்.

**துவக்கம்**: நவம்பர் மாதம் கிறிஸ்து அரசர் பெருவிழாவிற்கு அடுத்துவரும் ஞாயிறு துவங்கி, கிறிஸ்து பிறப்பு பெருவிழாவிற்கு முந்தினநாள் வரையுள்ள நாட்களைக் கணக்கிட்டு, திருவருகைக்காலமாக திருஅவை நமக்கு வழங்குகிறது.

அதன்படி திருவருகைக் கால முதல் ஞாயிறு அன்று வருகைமாலை (Advent Wreath) திருவருகையின் அடையாளமாக ஆலயங்களில் வைக்கப்படுகிறது. திருவருகைக் காலத்திற்கான குறியீட்டு மரபுகளில் ஒன்றான இது 1830ஆம் ஆண்டில் தோன்றியது. கிறிஸ்தவர்கள் ஓர் ஆன்மிகத் தயாரிப்பாக இந்த செயற்பாட்டை நான்கு வாரங்களுக்கு நான்கு மெழுகுவர்த்திகளைக்கொண்டு செயல்படுத்தி தங்களை ஆயத்தப்படுத்தினர். அவ்வாறே நாமும் செயல்பட திருஅவையால் அழைக்கப்படுகிறோம்.

**வருகைமாலை (Advent Wreath) உணர்த்தும் செய்திகள்**:

(A) வட்ட வடிவம் – கடவுளின் நித்தியம்; முடிவில்லா அன்பு.

(B) பச்சை நிறம் – ஆன்மாவின் அழியாத்தன்மை; நிலைவாழ்வு.

(C) **மெழுகுதிரிகள்:**

(i) ஊதாநிறம் (Purple)–ஜெபம், தவம், தியாகம், ஆன்மிக பிரதிபலிப்பு ஆகியவற்றிற்கான காலம்.

(ii) இளஞ்சிவப்பு நிறம் (Pink) – மகிழ்ச்சியான எதிர்பார்ப்பு.

(iii) வெள்ளைநிறம் (White) உலகின் ஒளியான இயேசுவின் பிறப்பு.

(D) **பெயர், பொருள் மற்றும் அடையாளம்:**

(i) “இறைவாக்கினர் திரி” என்றழைக்கப்படும் ஊதா நிற மெழுகுதிரி, திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு அன்று, ஒளியாம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை நாம் நம்பிக்கையுடன் எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம் என்னும் பொருள்பட “எதிர்நோக்கின்” (Hope) அடையாளமாக ஏற்றப்படுகிறது. இது இறைவாக்கினார்கள் உரைத்த மெசியா பற்றிய இறைவாக்குகளையும், நம்பிக்கையையும் நமக்கு நினைவுபடுத்துகிறது.

(ii) “பெத்லஹேம் திரி” என்றழைக்கப்படும் ஊதா நிற திரி, கிறிஸ்து இந்த உலகற்கு அமைதியைக்கொண்டு வருகிறார் என்னும் பொருள்பட, “அமைதியின்“ (Peace) அடையாளமாக இரண்டாம் ஞாயிறு அன்று ஏற்றப்படுகிறது. இது புனித யோசேப்பு, மரியாளின் பெத்லஹேம் பயணத்தையும், கிறிஸ்து பிறப்பு கொண்டுவரும் அமைதியையும் பிரதிபலிக்கிறது.

(iii) “இடையர்களின் திரி” என்றழைக்கப்படும் இளஞ்சிவப்பு நிற (Pink) திரி, கிறிஸ்து உலகிற்கு மகிழ்ச்சியின் கொடையாக வருகிறார் என்னும் பொருள்பட, “மகிழ்வின்” (Joy) அடையாளமாக மூன்றாவது ஞாயிறு அன்று ஏற்றப்படுகிறது. இது அன்று இறைவனின் பிறப்பில் உணரப்பட்ட மகிழ்ச்சியையும், இன்று அவர் மீண்டும் வருவதை எதிர்பார்த்து நாம் கொண்டிருக்கும் மகிழ்வையும் எடுத்துரைக்கிறது.

(iv) “வானதூதர்களின் திரி” என்றழைக்கப்படும் ஊதாநிற திரி மனுக்குலம் மீதுகொண்ட பேரன்பினால் இறைமகன் இயேசு மனிதரோடு உறவாட ஒரு மனிதராகவே பிறக்கிறார். என்னும் பொருள்பட, “அன்பின்” (Love) அடையாளமாக நான்காவது

ஞாயிறு அன்று ஏற்றப்படுகிறது. இது இயேசுவின் பிறப்பில் வானதூதர்கள் அறிவித்த கடவுளின் அன்பின் செய்தியை வெளிப்படுத்துகிறது.

(v) "கிறிஸ்து திரி" என்றழைக்கப்படும் வெள்ளைநிற திரி "மனுக்குலத்தை பாவ இருளிலிருந்து மீட்க ஒளியாக கிறிஸ்து பிறக்கிறார்" என்னும் பொருள்பட ஒளியின் (Light) அடையாளமாக கிறிஸ்து பிறப்பு நாளன்று ஏற்றப்படுகிறது. இது எதிர்நோக்கு-அமைதி-மகிழ்ச்சி-அன்பு என்னும் கொடைகளைப் பொழிந்து, ஒவ்வொரு மனிதருக்குள்ளும், ஒட்டுமொத்த உலகிற்குள்ளும் ஒளியாக கிறிஸ்து பிறக்கின்றார் என்பதை சுட்டிக்காட்டுகிறது.

இவ்வாறாக இயேசுவின் முதல் வருகையையும், இரண்டாம் வருகையையும் பிரதிபலிக்கும் இந்த "அட்வென்ட் ரீத்தை" பார்க்க மிக அழகாக இருக்கிறது என்றெண்ணி, வெறுமனே பார்த்துவிட்டு மறந்து கடந்து செல்லாமல், "நீங்கள் மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்" (மத் 3:8) என்ற இறைவார்த்தையை வாழ்ந்துகாட்ட நாம் அழைக்கப்படுகிறோம்.

**எதிர்நோக்கு (Hope):** "நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி; கண்ணுக்குப் புலப்படாததைப்பற்றிய ஐயமற்ற நிலை (எபிரேயர் 11:1)", "எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது" (உரோ 5:5) என்று புனித பவுல் கூறுகிறார். ஆக நம்பிக்கை இன்றி எதிர்நோக்கு இல்லை.

இதனை முழுமையாக நம்பியவராய் மறைந்த நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், எதிர்நோக்கு என்பது வருங்காலம் குறித்த நேர்மறைக் கருத்து மட்டுமல்ல; அது நன்மைத்தனத்திற்கான மனிதரின் அர்ப்பணத்தால் ஊட்டம் பெறும் வாழ்க்கை முறை என்று எடுத்துரைக்கிறார். எதிர்நோக்கு என்னும் நெருப்பை தொடர்ந்து பற்றியெரியச் செய்து எதிர்நோக்கின் திருப்பயணிகளாக தொடர்ந்து பயணிக்க வலியுறுத்துகிறார்.

எனவே மாண்ட்போர்த்துவ நண்பர்களாகிய நாம் எச்சூழலிலும் இந்த எதிர்நோக்கு திரியை அணையாமல் காப்பதோடு, "நம் வீட்டார் உறவினர், நண்பர், மாணவர், உடன்

பணியாளர், உடன் பணிப்பவர்” என பிறர் கைகளிலும் கொடுத்து அவர்களது நம்பிக்கையையும், எதிர்நோக்கையும் வலுப்படுத்துவோம். வாழ்விற்கு ஒளியூட்டுவோம்.

**அமைதி (Peace):** அமைதி என்பது மனநிறைவு, மனநலனைக் குறிக்கிறது. அகத்தில் உண்டாகும் அமைதி புறத்திலும் பிரதிபலிக்கும். எனவே அமைதியின் அரசரான இயேசு தரும் அமைதியைப் பெற்றவர்களாய், நம்மைச் சுற்றியிருப்போருக்கும் அமைதி அலைகளைப் பரப்புவோம். அமைதியின் தூதுவர்களாக செயல்படுவோம். உலக அமைதிக்காக இறைவேண்டல் செய்வோம்.

**மகிழ்ச்சி (Joy):** கொடியோடு இணைந்திருக்கும் கிளைகள் போல நாம் ஆண்டவர் இயேசுவோடு இணைந்து, மகிழ்ச்சியாக இருப்போம். அந்த மகிழ்ச்சியை நோய் தீர்க்கும் மருந்தாக பிறருக்கும் கொடுத்து பிறர்நலம் பேணுவதில் மகிழ்வோம். பிரதிபலன் எதிர்பாராது பகிர்தலில் மகிழ்வோம். மன்னிப்பு கேட்பதிலும் இன்னா செய்தாரை ஒறுத்து, அவர் நாண நன்னயம் செய்துவிடலிலும் மகிழ்வு கொள்வோம்.

**அன்பு (Love):** “என் அன்பில் நிலைத்திருங்கள்; நான் உங்களை அன்பு செய்வதுபோல் நீங்கள் பிறரை அன்பு செய்யுங்கள்” என்ற அன்புருவான இயேசுவின் கட்டளையை நாம் ஏற்றவர்களாய் அவரது அன்பில் நிலைத்திருந்து, அந்த அன்பைப் பிறருக்கும் கொடுத்து, நல்ல சமாரியரைப் போன்று வாழ்வோம்.

**முடிவுரை:** உலகின் ஒளியான இயேசு பாலன் நம் உள்ளங்களிலும், இல்லங்களிலும் பிறப்பதற்கு இந்த யூபிலி ஆண்டின் நிறைவில் திருவருகைக் காலத்தை நன்கு பயன்படுத்திக்கொள்வோம். நீங்களும் ஆயத்தமாய் இருங்கள். ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிடமகன் வருவார் (மத் 24:44) என்னும் இறைவாக்கை என்றும் நினைவில் இருத்தி எதிர்நோக்கின் பயணிகளாக தூய அன்னைமரியாள், புனித யோசேப்பு, புனித மாண்ட்போர்ட் ஆகியோரின் துணையோடும் மற்றும் திருஅவையோடும் இணைந்து பயணிப்போம்.

அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு பெருவிழா வாழ்த்துக்கள்!

**S. டெல்சி,**
மேல கல்கண்டார்கோட்டை,
திருச்சி.

# You are Eternal !

Birth is not the beginning of life. Death is not the end of life. Life is eternal. You are eternal. Birth appears to be the beginning and death appears dreadful and creates tantrums in the human mind. It is only because life passes through time and space. And reason is unable to fathom life.

Humans are fearful of death mostly because of their narrow attachments. Otherwise, it should have been a joyful encounter. Death should be a blissful transition. “Fear not those who can kill the body. But they are not able to kill the soul.” (Mt. 10:28)

Religion will teach you detachment to replace attachments. No, expand you attachments. Expand it to the brims. Move from you to the other; always and everywhere! When you enhance your attachments, you already experience the limitless eternity.

Fearlessness is the path to liberation. Fear of death is the cause of all other fears in human existence.

Fear creates panic. In a panic, humans hold on to fragile hangers. Some accumulate money. Some cling on to power. Some trust wars. Some collet followers. They give a defective sense of eternity. Convinced, they use shortcuts to achieve them.

You are already eternal. What should you seek further? Therefore, behave like God. “Be perfect like your heavenly father is perfect!” (Mt. 5:48)

Be benevolent. Break the boundaries of your selective sympathy and become ominpresent.

Reread Kahlil Gibran, "The trembling river fears the ocean it would inevitably arrive. It fears that it will disappear into it. No, it is not disappearing but becoming the ocean!"

**Rev. Fr. Leonard, CSC**
Vellakulam, Trichy Dt.



**"The free gift of God is Eternal life in Christ Jesus our Lord."**

*- Romans 6:23*

**TO THE KIND ATTENTION OF ALL THE WRITERS ...**

*Your kind contribution of your reflections, poems, drawings and articles could be based on the Word of God, the events and activities of the Church, the services and projects of Montfortian Gabrielite Associates, the life and the spirituality of* **St. Louis Marie de Montfort, his loving services, the efforts he took in building the Kingdom of God, values of his consecrated life and features of his writings and books.**

*Kindly send all your writings and works to the* **email id : montfortnanbanpot@gmail.com** *before* **25.12.2025.** *The next issue of* **NANBAN MAGAZINE : JAN - APR 2026.** *Thank you !*

# FRIENDS OF THE CROSS: A CALL TO COURAGEOUS HOLINESS IN THE SPIRIT OF ST. LOUIS-MARIE DE MONTFORT

***By Bro. Jesuraja, sg***

In the heart of Christian discipleship lies a mystery that many shy away from-**the Cross**. Yet, for St. Louis-Marie de Montfort, the Cross is not merely a symbol of suffering but a royal path to holiness, a mark of divine friendship, and the true sign of a disciple of Jesus. His powerful letter, *Friends of the Cross*, written in 1714, continues to speak to us today-religious Brothers, teachers, and lay associates-inviting us to embrace our crosses with love, faith, and supernatural joy.

## A SPIRITUAL BROTHERHOOD OF THE CROSS

Montfort envisioned a spiritual movement-a **holy society of Friends of the Cross**-a group of committed Christians who would not run from suffering but accept it as a gift, seeing it as participation in the sufferings of Christ. To be a "Friend of the Cross," he said, is to be a **true follower of Jesus crucified**, and not just a Christian by name.

He wrote: ***"You are the salt of the earth. You are the true disciples of a crucified God."***

This is a profound message for us today, especially in a culture that seeks comfort, ease, and popularity. Montfort's words challenge every educator, religious, and layperson. **Are we forming young people to carry the Cross or to avoid it?**

## SUFFERING: A SCHOOL OF LOVE AND FORMATION

For St. Louis de Montfort, suffering is not punishment, but a means of purification and transformation. He invites us to see suffering not with human eyes, but with **eyes of**

**faith**. As religious Brothers and educators, we are often faced with difficulties: misunderstanding, tiredness, lack of recognition, and even spiritual dryness. Instead of fleeing from them, Montfort calls us to **embrace these trials as opportunities to grow in virtue**.

He says: ***"You are walking along the same path that He trod before you. It is the narrow path that leads to life."***

This spirituality is especially relevant for teachers and lay associates who labour daily in classrooms, parishes, and communities. Our crosses may be small and hidden, but when offered with love, they become redemptive.

**MARY: OUR GUIDE ON THE WAY OF THE CROSS**

True to Montfortian spirituality, the Cross is never separated from **Mary, the Mother of Sorrows**. She stood faithfully at the foot of the Cross, sharing in the Passion of her Son. To be a Friend of the Cross is also to be a **true child of Mary**, who teaches us how to suffer with love, humility, and total surrender.

Let us not forget that Montfort's own motto was: ***"God Alone."***

He teaches us to detach from worldly glory and cling only to Christ Crucified, through Mary. Our mission as religious and lay educators is not just academic or pastoral; it is profoundly **spiritual and sacrificial**.

**A CALL FOR TODAY**

As members of the Montfortian family in India, we are called to **revive the spirit of the Friends of the Cross**.

This means:

- ★ Living the Gospel radically and joyfully
- ★ Accepting trials as gifts
- ★ Being countercultural witnesses in a world that avoids suffering

- ⋆ Forming young people with hearts ready for mission, sacrifice, and holiness
- ⋆ Living in communion with Mary, our Mother and Model

Let us encourage one another, as Montfort did: ***"Courage, Friends of the Cross! Fight bravely in the footsteps of the crucified Jesus."***

May we, the Montfortian family-Brothers, teachers, lay associates-become true Friends of the Cross, walking with Christ, carrying our crosses daily, and helping others carry theirs.

**May Jesus Christ be loved in every heart, through Mary. Amen.**



**"No Cross! What a Cross!"**

*- St. Montfort*

**எழுத்தாளர்களின் கனிவான கவனத்திற்கு !**

மாண்ட்போர்ட் நண்பன் இதழில் இறை வார்த்தைகளைப் பற்றிய
சிந்தனைகள், திருஅவையின் நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகள்,
மாண்ட்போர்த்துவ கபிரியேல் நண்பர்களின்
பணிகள் மற்றும் செயல்திட்டங்கள் மேலும்

**புனித லூயி மரி தே மாண்ட்போர்ட்டின் வாழ்வினில் நடந்த நிகழ்வுகள், அவரது ஆன்மிகம், அவர் ஆற்றிய அன்புப் பணிகள், இறையரசை கட்டியெழுப்ப அவர் எடுத்த முயற்சிகள், அவரது அர்ப்பண வாழ்வின் விழுமியங்கள், அவர் எழுதிய நூல்களின் சிறப்புகள் மற்றும் சிந்தனைகள்**

போன்றவற்றைப்பற்றி, தங்களது கருத்துக்களையும், எண்ணங்களையும், கவிதைகளையும், ஓவியங்களையும் மற்றும் சிந்தனைக் கட்டுரைகளையும் இந்த இதழ் மூலம் பகிர்ந்துகொள்ள விரும்புவோர்

**25.12.2025**–க்குள் **montfortnanbanpot@gmail.com** என்ற மின்னஞ்சல் (email) முகவரிக்கு அனுப்புக.

அடுத்த இதழ் வெளியீடு : **ஜனவரி - ஏப்ரல் 2026.** நன்றி !

# An Impulse from you Oh Lord!

**Chorus :** **Fill my mind Oh! Lord**
**To see your Power at work.**

**Verses :**

1. Long have I longed for an impulse from you
   Oh! Lord of life and vibrant folks
   Our Lord Incarnate walking our lanes
   Of dust and ash that whirl up Cares
   To share the Father's love you spare
   For all men and earthy lives.
2. Long have I longed for an impulse from you
   Oh! Lord of life and awesome truths
   You stirred the hearts to intense fire
   Of youth that moved to Emmaus
   Need we Lord such stirs of fire
   To drink deep into your truth to serve.
3. Long have I longed for an impulse from you
   Oh! Lord of love and ardent care
   You enriched the heart of Zacheus
   By a glance and a call by name
   Floored was he but enchanted full
   His vision changed to awesome fame.
4. Long have I longed for an impulse from you
   Oh! Lord of life and woesome hearts
   You asked a lady for a drink
   At Joseph's well as you did speak
   Instant Preacher did she become
   Turned she and folks to a new life.
5. Long have I longed for an impulse from you
   Oh! Lord of life and youthful hearts
   You stirred the hearts of Pete and Tom
   One denied and other in doubt
   Transformed were they to holy realm
   Both bled to death in love for you..

**Bro. Emmanuel P.J.** (Province of Delhi)

# ஆண்டவருக்காகப் போராடுங்கள்!

ஆண்டவரால் படைக்கப்பட்ட இம்மண்ணுலகில் ஒவ்வொரு உயிரினமும் தங்கள் வாழ்வின் இருப்பதைத் தக்கவைத்துக்கொள்ள போராடிக்கொண்டுதான் இருக்கின்றன. இதில் மானுடச் சமூகம் மட்டும் விதிவிலக்கன்று. இம்மானுடச் சமூகம் மொழிக்காகவும், இனத்திற்காகவும், தனக்கான உரிமைகளுக்காகவும் இன்ன பிறவற்றிற்காகவும் பல போராட்டங்களை முன்னெடுத்துள்ளன. அத்தகைய தன்னலமற்ற உலகப் பிரகாரமான போராட்டமே ஒரு சாதாரண மனிதனை சாதனைத் தலைவனாக இன்றளவும் உயர்த்திப் பிடித்து வருகின்றதனை வரலாறு நமக்குப் படம் பிடித்துக்காட்டுகின்றது. இன்றைய சூழலில் வளர்ந்து வரும் அறிவியல் வளர்ச்சியால் சமூகம் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. அதனை மறுக்க இயலாது. ஆயினும் தனிமனிதனின் முன்னேற்றம் என்பது கேள்விக்குறியே. அதன்பொருட்டு அவன் போராடத் தொடங்குகின்றான். இருப்பினும் தன்னளவில் மட்டுமே வெற்றி பெறவேண்டும், தனக்கான தேவைகள் கிடைக்கப்பெறவேண்டும் என்ற எண்ணம் மட்டுமே மேலோங்குகிறது. மாறாக, பிறருக்காகப் போராடும் அறச்சீற்றம் என்பது அருகி வருவது வேதனைக்குரிய ஒன்று.

**ஆண்டவருக்காகப் போராடல்:**

மனிதனின் செய்கைகள் எல்லாம் அவர்களின் எண்ணங்களின் பிரதிபலிப்பேயாகும். இளமைப் பருவத்தில் போராட்டச் சூழலில் வார்த்தெடுக்கப்பட்ட மனிதனே களம் காணும் போராளியாகிறான். தனக்காக மட்டுமல்லாமல் தான்சார்ந்த பிறருக்காகவும் போராடும் போது அது தனிமனிதனுக்கானதாக அல்லாமல் ஒட்டுமொத்த மானுடத்திற்கானதாகவும் மாற்றம் பெறுகின்றது. இத்தகைய போராட்டமே ஆண்டவருக்காகப் போராடல் என ஏற்றமும் பெறுகின்றது. ஏனென்றால் ஆண்டவர் விரும்பியது உலகின் கடையெல்லை வரை பேரரசுகளை நிறுவி ஆட்சி புரியவா? விலைமதிக்க முடியாத அணிகலன்களைப் பெற வேண்டும் என்பதா? அதிகாரக் குவியல் அனைத்தும் தனதாக்கிக் கொண்டு மக்களை வதைக்கவேண்டும் என்பதா? கிடையாதே. மாறாக

அவர் விரும்பியது செல்வந்தர்களின் அதிகாரக் குவியலுக்கு எதிராக, உலக கவர்ச்சி நாட்டத்திற்கெதிராக, தன்னலத்திற்கு எதிராக என்றல்லவா வெளிப்படுத்துகிறார். எனவே மானுடத்திற்கு எதிராக நிலவும் அநீதியைக் களைவதன் தன்மையே ஆண்டவருக்காகப் போராடுதல் ஆகும்.

**ஆண்டவருக்காகப் போராடிய புனித மாண்ட்போர்ட்:**

சிறுவயதில் தன் பெற்றோரின் அரவணைப்பினாலும் வழிகாட்டுதலினாலும் உந்தப்பட்ட புனித மாண்ட்போர்ட் அவர்கள், ஆண்டவரின் நாமத்தினை அடிநாதமாகக் கொண்டு வாழ்ந்தார். அதன்விளைவே பின்னாட்களில் அவரை ஆண்டவருக்காகப் போராடத் தூண்டியது. பாலகப்பருவத்தில் ஏழைகளுக்காக இரங்கி அவர்களின் தேவைகளை இயன்றவரை நிறைவேற்ற வேண்டும் என எழுந்த மனவெழுச்சியின் தன்மையே ''கடவுளுக்காகத் தன்னையே இழக்கத் தயாராகாதவன் ஆண்டவருக்காக என்ன செய்திட முடியும்'' என்னும் பொன்மொழி அவருள் முகிழ்த்தது. தன்னுடன் பயிலும் சக நண்பனின் வறுமை நிலையை உணர்ந்த புனித மாண்ட்போர்ட் அவர்கள், அவனுக்காக தையல் கடைக்காரரிடம் பரிந்து பேசி புதிய ஆடையை வாங்கிக் கொடுக்கிறார். பின்னாட்களில் செசோன் பாலத்தைக் கடந்து பாரீசுக்குச் செல்ல பயணப்பட்டபோது 'இவ்வுலகில் எதன் மீதும் பற்றுக்கொள்வதில்லை' என்று தன்னுள் ஓர் உறுதிமொழியை ஏற்றுக்கொண்டார். அதன் காரணமாக அப்பொழுதே தன்னிடமிருந்த ஆடைகளையும் பணத்தினையும் வறியவர்களுக்கு வழங்கினார். இது அவருடைய உலகப் பிராகாரமான மற்றும் ஆண்டவருக்கு ஆதரவான போராட்டம் எனில் மிகையாகா.

புனித மாண்ட்போர்ட் அவர்கள், 'ஆண்டவரின் உடனிருப்பை அறிதலே நலம்' என்று அறியாத மூடர்களுக்கு மறைக்கல்வியின் அருளுரைகளை எடுத்துரைத்தார். வெள்ளத்தால் அழியாத, வெந்தழலால் வேகாத, கவர்ந்துகொள்ளத்தான் முடியாத, கொடுத்தாலும் நிறைவன்றி குறைவுறாதது கல்வியே என்னும் வரிகளுக்கேற்ப, ஏழைகள் கல்வி கற்றலே சிறப்பு என விரும்பினார். அதன்விளைவாகப் பல முயற்சிகளுக்குப் பிறகு

1714–ஆம் ஆண்டு கட்டணமில்லாப் பள்ளிகளைத் திறந்தார். அதன்மூலம் அன்றைய நாட்களில் ஆண்கள் பெண்கள் என இருபாலருக்கும் கல்விக்கண் திறந்தார். 'மண்டினி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்பதற்கேற்ப, புவாத்தியே இல்லத்தில் ஆன்மிகக் குருவாக பதவியேற்ற நாட்களில் ஆதரவற்றோரின் பசிக்கூக்குரலை கண்டு மனமிரங்கி அவர்களுக்கு நிறைவான உணவு கிடைக்க ஏற்பாடு செய்தார். அத்தோடு மட்டுமல்லாமல் குருக்களுடன் உணவு உண்ணாது, அந்த ஏழை மக்களோடு உணவு உண்டு மனநிறைவு கண்டார்.

"உலகத்தின் பணக்காரர்களே விழித்திடுங்கள்
எங்களின் கூக்குரலைக் கேளுங்கள்
ஏழைகளாகிய நாங்கள் உங்கள் உதவியை நாடுகிறோம்
எங்கள் பெரிய துன்பத்தில்
நாம் ஒரு கிறிஸ்துவ குடும்பம்"

ஏழைகள் மாண்ட்போர்ட் என்னும் மனிதரை நேசிக்கின்றனர். அவரும் அவர்களுக்காகத் தாழ்ச்சி உணர்வோடு செயல்படுகிறார் என்பதனைக் கண்டுணர்ந்த அருட்பணி டூர் என்பவர் 'ஏழைகளின் கூக்குரல்' என்னும் தலைப்பில் மேற்சுட்டப்பட்ட பாடலைப் பாடச் செய்தமை புனித மாண்டபோர்ட் அவர்கள் ஏழைகளுக்காகத் தன்னையே அர்ப்பணித்ததின் வெளிப்பாடே.

இவ்வாறு ஏழைகளுக்காக இரங்கி அவர்களின் வறுமை, பசிப்பிணி மற்றும் ஆதரவின்மை போன்ற துயர்களைக் களைந்து வாழ்தலே இறை விருப்பமாகும். செல்வத்திற்கு எதிராக, தன்னலத்திற்கு எதிராக, தன் சிலுவையை மகிழ்வோடு தானே சுமப்பவனே ஆண்டவருக்காகப் போராடும் சுயநலமற்ற போராட்டம் எனலாம். அதன்வழி போராடிய இறை விருப்பத்தின் வெளிப்பாடுதான் சாதாரண லூயி கிரிங்கோன் என்னும் பாடுள்ள மனிதன் இன்றளவும் போற்றுப்பெறும் புனித லூயி மரி மாண்ட்போர்ட் என்னும் சாதனை மனிதனை உலகிற்கு வெளிப்போந்தது. எனவே அன்பார்ந்தவர்களே! இறைச் சமூகத்தில் தாழ்த்திக் கொள்ளுதலோடு நின்றுவிடாமல் மானுடர்

மத்தியிலும் குறிப்பாக ஏழைகள் மத்தியிலும் தாழ்த்துதலே நம்மை உயர்த்தச் செய்யும் என்பதனை உணர்தலே வாழ்வின் முதிர்ச்சியாக அமையும்.

**ஆண்டவருக்காகப் போராட அழைப்பு:**

'ஆண்டவர் மனிதரைத் தம் உருவில் உண்டாக்கினார்' எனத் தொடக்க நூல் கூறுகின்றது. அதன்படி ஒவ்வொரு மானிடரும் அவரின் உருவந்தாங்கியோர் மட்டுமன்று. அவருடைய உள்ளத்தையும் கொண்டிருப்போராய் இருத்தல் வேண்டும் என்பதுதானே அதன் உட்பொருள். ஆனால் அதற்கு எதிராக அல்லவா மானுடச் சமூகம் பயணித்துக்கொண்டிருக்கிறது. உலக நாட்டத்திலும், கவர்ச்சி இன்பத்திலும், கொடுஞ்செயல்களிலும் மனிதனுக்கு எதிராக மனிதன் எழும் நிலை அல்லவா இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதற்கான காரணத்தை ஆராய முற்பட்டால் அறிவது சுய நலமேயாகும். அதனால் ஆண்டவரின் உடனிருப்பினை அறிந்துகொள்ளவேண்டுமென்றால் இவற்றிற்கெதிராக ஒன்றுபட்டு பொதுமை நோக்குடன் போராடுதல்தான் ஆண்டவர் உருவந்தாங்கிய மானிடரின் வாழ்வாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இன்றும் தெருவோர யாசகர்கள், உடல் அவதியுறும் நோயாளர், உழைத்து உருகும் தொழிலாளர், தண்டனை பெறும் நிரபராதி, ஆதரவற்றோர், அநேகர். இவர்களுக்காக பரிதாபங்கொண்டு கண்ணீர்விடுவது இவர்களது துயரைக் களைந்து விடுமா? இவை போன்ற பல சமூகக் கேடுகளுக்கு எதிராகக் கிளர்த்தெழுந்து அவர்களின் துயர்களைய களமாட வேண்டாமா? சிந்திக்க என்ற பொன்மொழியை உதிர்த்த புனித மாண்ட்போர்ட் இறக்கும் வரை ஏழைகளின் மேல் கரிசனைக் கொண்டார். அவர்களுக்குச் செய்யும் நற்காரியங்களில் உறுதியுடன் நின்றார். அவர் காட்டிய சீரிய வழியில் நின்று கடவுளுக்காகத் துணிபு கொள்ள வாழ்தலே ஆண்டவர் சுமந்த சிலுவையை நாம் சுமப்பதற்கு ஒப்பாகும். 'என் ஆவி தவறிழைக்கும் மனிதனில் என்றென்றும் தங்கப் போவதில்லை' என்று வேதம் கூறியதனை உள்ளத்தில் இருத்துங்கள். சுயநலம்

தவிர்த்து பொதுமை பாராட்டுங்கள். நீங்களே ஆலயமாய் மாறுங்கள். அதில் ஆண்டவர் வாசம் செய்ய இதோ! விரைந்து வருகிறார். உங்களுக்கான தேவைகள் சந்திக்கப்படும். அப்போது ஆண்டவருக்காகப் போராடியதன் அர்த்தம் புலப்படும். நன்றி!

**முனைவர் ம. லியோ சார்லஸ்,**
முதுகலைத் தமிழாசிரியர் மற்றும்
ஒருங்கிணைந்த தேசிய மாணவர் படை அலுவலர்.
புனித ஜேம்ஸ் மேனிலைப்பள்ளி, பாலக்குறிச்சி.




Art by
*S. Stephen*
Montfort Home (Juniorate), Palakurichy.

# திருச்சிலுவையின் மகிமை விழா!

அனைத்து கிறிஸ்தவர்களின் மீட்பின் சின்னமாக இன்று அகிலமெங்கும் போற்றப்படும் திருச்சிலுவையானது, அக்கால யூதர்களால் ஓர் அவமான சின்னமாகக் கருதப்பட்டது. மீட்பின் சின்னமான இத்திருச்சிலுவை, கிறிஸ்தவர்களின் வெற்றியின் சின்னம்! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, நம் தந்தை இறைவனின் மீது கொண்டிருந்த அன்பின் பொருட்டு, தமது தாழ்ச்சியினாலும், கீழ்ப்படிதலினாலும், பாவத்தின் மீதும் சாத்தானின் மீதும் கொண்ட வெற்றியையே திருச்சிலுவை உயர்த்தப்பட்ட விழாவாக நாம் கொண்டாடுகிறோம்.

**விழா வரலாறு:**

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மீதும், கிறிஸ்தவத்தின் மீதும் அதிக பற்றார்வம் கொண்டிருந்த அரசி ஹெலன் (இலேனம்மாள்), பேரரசர் கான்ஸ்டன்டைனின் தாயார், 326ஆம் ஆண்டில் புனித பூமிக்கு திருப்பயணம் மேற்கொண்டார். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வாழ்நாட்களின் குறிப்பிடத்தக்க இடங்களை அடையாளம் கண்டு, அவ்விடங்களில் தேவாலயங்களை நிறுவுவதையே தம் முக்கியப் பணியாகக் கொண்டிருந்தார். எருசலேம் சென்று, இயேசுவின் உண்மையான சிலுவையைக் கண்டுபிடித்து, கல்வாரி மலையிலும், இயேசுவின் கல்லறையின் மீதும் தேவாலயங்களைக் கட்டுவதையே தம் வாழ்வின் நோக்கமாகக் கொண்டிருந்தார்.

இயேசுவின் காலியான கல்லறையையும், கல்வாரி மலையையும் அடையாளம் கண்டபோது, அவர் மூன்று கைவிடப்பட்ட சிலுவைகள் அங்கு புதையுண்டிருப்பதைக் கண்டுபிடித்தார். சில ஆராய்ச்சிகளுக்கும் விசாரணைக்கும் பிறகு, அந்நகர ஆயர், அவை இயேசுவையும், அவரது இருபுறமும் இரண்டு திருடர்களையும் சிலுவையில் அறையப்பயன்படுத்தப்பட்ட சிலுவைகள்தான் என்பதை உறுதிப்படுத்தினார். எந்தச் சிலுவை இயேசுவுடையது என்று ஹெலனாவுக்குத் தெரியாததால், ஒரு நோய்வாய்ப்பட்ட பெண்ணை வரவழைத்து, மூன்று சிலுவைகளையும் தொடவைக்கும்படி ஏற்பாடு செய்தார். அந்தப் பெண் அவற்றில் ஒன்றை இறுதியாகத் தொட்டவுடன் உடனடியாகக்

குணமடைந்தர். அதைக் கொண்டு அச்சிலுவையே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பாடுபட்டு மரித்த, அவரது உண்மையான திருச்சிலுவை என்பதைக் கண்டுகொண்டார். இவ்வாறு, பேரரசர் கான்ஸ்டன்டைனின் தாயான அரசி ஹெலன், செப்டம்பர் 14, 326 அன்று ஆண்டவரின் திருச்சிலுவையைக் கண்டுபிடித்தார்.

இயேசுவின் உண்மையான திருச்சிலுவை, கல்வாரிமலை மற்றும் இயேசுவின் கல்லறை ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பேரரசர் கான்ஸ்டன்டைன் அப்புனித இடங்களுக்கு சுற்றுச்சுவர் அமைத்து, பாதுகாத்து, பராமரித்தார். இயேசுவின் உண்மையான திருச்சிலுவைக்கு ஓர் இல்லம் அமைக்க முற்பட்டு, கல்வாரி மலையிலும், இயேசுவின் கல்லறையின் மீதும் ஆலயம் எழுப்பப்பட்டு, செப்டம்பர் 13, 335 அன்று அர்ப்பணிக்கப்பட்டது.

இவ்வாறு, 13 செப்டம்பர் 335 அன்று, இயேசுவின் கல்லறையின் மீது ஓர் ஆலயமும், எருசலேமில் உள்ள கொல்கதா என்னும் இடத்தில் கல்வாரி மலையிலும், இயேசுவின் உண்மையான திருச்சிலுவை குடிகொள்ளும் வண்ணம் அங்கு அதற்கு ஓர் ஆலயமும் கட்டியெழுப்பப்பட்டு அர்ச்சிக்கப்பட்டன. அதற்கு அடுத்த நாளான செப்டம்பர் 14, ஹெலனால் கண்டுபிடிக்கப்பட்ட திருச்சிலுவை, பொதுமக்களால் வணக்கம் செய்யப்படும்படி வைக்கப்பட்டு, அப்பக்தி ஓர் விழாவாக மாறியது. இயேசுவின் திருச்சிலுவையைக் கண்டு ஆசி பெற உலகெங்கிலுமிருந்து ஏராளமான மக்கள் கூட கூட, அப்பெருந்திரளான மக்கள் கூட்டத்தினர் அனைவரும் காணும்படியாக இயேசுவின் திருச்சிலுவையானது உயர்த்தி நிறுத்தப்பட்டது.

“பாலைவனத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டதுபோல மானிடமகனும் உயர்த்தப்படவேண்டும்.”-யோவான் 3:14. இயேசு கிறிஸ்து நிக்கதேமிடம் கூறிய இவ்வார்த்தைகளுக்கேற்ப ஆண்டவரது திருச்சிலுவை உயர்த்தப்பட்டது. அன்று முதல் அவ்விழா “திருச்சிலுவை உயர்த்தப்பட்ட விழா” என்று அழைக்கப்பட்டது. முதன்முதலில் கீழைத்திருச்சபையால் கொண்டாடப்பட்ட இவ்விழா, நாளடைவில் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையாலும், இன்றும் சில பிரிவினை சபைகளாலும் கொண்டாடப்படுகிறது.

## பேரரசர் ஹெராக்ளியஸ் மீட்ட திருச்சிலுவை:

7ஆம் நூற்றாண்டில், பாரசீக மன்னர் இரண்டாம் சோஸ்ரோஸ், எருசலேமை ஆக்கிரமித்து, உண்மையான சிலுவையின் நினைவுச் சின்னத்தை பெர்சியாவிற்கு எடுத்துச் சென்றார். இறுதியில் பேரரசர் ஹெராக்ளியஸ் பெர்சியர்களை தோற்கடித்து சிலுவையை எருசலேமுக்குக் கொண்டு வந்தார். இந்த மறுசீரமைப்பு ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும், மேலும் இது இவ்விழாவின் ஒரு முக்கியமான அங்கமாகவும் கொண்டாடப்படுகிறது.

## முப்பெரும் விழாக்கள்:

“சிலுவையின் வெற்றி விழா” என்றும் அழைக்கப்படும் “திருச்சிலுவை உயர்த்தப்பட்ட விழா”, மூன்று வரலாற்று நிகழ்வுகளை நினைவுகூர்கிறது.

1. 326இல் உண்மையான சிலுவை கண்டுபிடிக்கப்பட்டது.
2. 335இல் பொது வணக்கத்திற்காக திருச்சிலுவை முதன் முதலில் உயர்த்தப்பட்டது மற்றும்
3. 628இல் பெர்சியர்களிடமிருந்து திருச்சிலுவை மீட்கப்பட்டது.

என்று இந்த மூன்று வரலாற்று நினைவுகளையும் இவ்விழா நினைவுறுத்துகின்றது.

## சிலுவை நம் பெருமை; அன்பின் உச்சம்

கிறிஸ்து தம் சிலுவையினால் பாவத்தின் மீதும் சாத்தானின் மீதும் கொண்ட வெற்றியே, திருச்சிலுவை உயர்த்தப்பட்ட விழா ஆகும். பாவ இருளில் சிக்கித் தவித்த மானுடம் மீட்படையக் காரணமானது இயேசுவின் திருச்சிலுவையே. கடவுள் மனிதன் மீது கொண்டிருந்த அவரது அளவற்ற பேரன்பின் வெளிப்பாடாக, தம் ஒரே பேரான மகனையே நமக்கு ஈந்தளிக்கும் அளவிற்கு தியாகம் செய்த இயேசுவின் சிலுவை மரணமே, அன்பின் உச்சம்!

சிலுவை–அன்பின் சின்னம்! தியாகத்தின் சின்னம்! வெற்றியின் சின்னம்! மீட்பின் சின்னம்! அர்ப்பணத்தின் சின்னம்!

கிறிஸ்தவர்களின் பெருமையின் சின்னம்! இதையே திருத்தூதர் பவுல்: “நானோ நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் சிலுவையை அன்றி, வேறு எதைப்பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்டமாட்டேன்...” என்று கலாத்தியர் 6:14இல் குறிப்பிடுகிறார்.

இயேசு சாதாரண மனிதனாய் பல பாடுகள்பட்டு, நமக்காக சிலுவை சுமந்து, மரித்து, உயிர்துறந்து, கிறிஸ்துவாக உயிர்த்தெழுந்து வெற்றிவாகை சூடியது அவர் நமக்காக உவந்து ஏற்ற சிலுவையினாலேயே. சாதாரண மனிதர்களாய் பல துன்பங்கள், வேதனைகள், அவஸ்தைகள்பட்டு மரிக்கும் நாமும், கிறிஸ்துவில் உயிர்த்தெழுந்து வெற்றிவாகை சூடுவதும் நாம் இயேசுவுக்காக உவந்து ஏற்கும் சிலுவையினாலேயே. சிலுவையின்றி வெற்றி இல்லை; சிலுவையின்றி மீட்பு இல்லை.

சிலுவையினாலேயே வெற்றி! சிலுவையினாலேயே மீட்பு! புனித மாண்ட்போர்ட்டின் வழியில், சிலுவையின் நண்பர்கள் ஆவோம்!

சிலுவையை நேசிப்போம்! சிலுவையை உவப்புடன் ஏற்போம்!


சிலுவையை இன்முகத்துடன் தழுவிக் கொள்வோம்!

சிலுவையில் அக்களிப்போம்! சிலுவையில் அகமகிழ்வோம்!

இயேசுவோடு இணைந்திருப்போம்!

“Abide in Me as I abide in you.” - John 15:4

**சகோதரி இ. பிரீத்தி தெரேஸா**
இயேசு – மரி ஊழியர்



**Happy Holy Family!**

# செசோன் பாலத்தில் எதிர்நோக்கின் பயணம்!

பாரிசிற்குச் செல்வதற்குமுன் லூயி மாண்ட்போர்ட் பெற்றோர்களிடமும், நெருக்கமானவர்களிடமும் மற்றும் எல்லாரிடமும் விடைபெற்றார். அவருடைய மாமா அருட்பணி. அலென் ராபர்ட், அவருடைய சகோதரர் ஜோசப் மற்றும் அவருடைய நண்பர் ஜான் பாப்டிஸ்ட் பிளேன் 3 கி.மீ. தூரமுள்ள செசான் பாலம் வரைச்சென்று கடைசி பிரியாவிடை கொடுத்தனர். செசான் பாலத்தைக் கடப்பது ஒரு குறிப்பிடத்தகுந்த நிகழ்வாக லூயிக்கு அமைந்தது.

கடவுளிடம் ஒன்றித்திருப்பதற்காக குடும்பத்தையும், உலக சொத்துக்களையும் விட்டுவிட்டு, முழங்கால் படியிட்டு, 'இந்த உலகத்தில் எதன்மீதும் பற்றுக்கொள்வதில்லை' என்று அவர் உறுதிமொழி எடுத்துக் கொண்டார். அவர் பயணத்திற்கு வைத்திருந்த பணத்தை ஒரு யாசகரிடம் கொடுத்துவிட்டார். மேலும் லூயி அவரின் பெற்றோர்கள் பயணத்திற்காக கொடுத்திருந்த புதிய ஆடையை மற்றொரு யாசகரிடமும் கொடுத்துவிட்டு அவருடைய ஆடையை வாங்கி அணிந்து கொண்டார். பின்னர் அந்தப் பாலத்தைவிட்டு கடந்து சென்றார்.

தன்னுடைய 19ஆவது வயதில் தன்னுடைய உலகப் பாசப்பிணைப்பை, உறவை, சமூகத்தைப் பிரிந்து இறைவாழ்வில் நுழைவதை குறிக்கும்விதத்தில் செசோன் பாலத்தைக் கடந்து சென்ற நிகழ்வு அமைந்திருந்தது. அப்பாலத்தைக் கடந்தவுடன் அவரது வாழ்வு முற்றிலும் இறை நம்பிக்கையைச் சார்ந்ததாக அமைந்திருந்தது. இறைவனே எல்லாம் என்பதைத் தன்னுடைய சொந்த உறவுகளுக்குத் தெளிவுபடுத்தும் விதத்தில் யாசகர்களிடம் தன்னுடைய பொருள்களையும், பணத்தையும், அனைத்தையும் கொடுத்து இறைவனிடம் சரணடைந்தார். மேலும் அப்பயணம் உலகத்தின் மீதும் ஆசைகள் மீதும் இருந்த எண்ணங்களையும், உணர்வுகளைக் கடந்து சென்றதை வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருந்தன. அன்பை வெளிக்காட்டி, இறைவனைத் தந்தையாகவும், இயேசுவை மீட்பராகவும், மரியாளைத் தாயாகவும் பெற்று வாழ்வதே உண்மையான மகிழ்ச்சி என உலகிற்கு உணர்த்தினார். நன்றி!

**இ. ரினிஸ்,**
மாண்ட்போர்ட் இல்லம், பாலக்குறிச்சி.

# Abandoning Society!

The world and it's people seem to be updating in themselves from generation to generation. But the conflict is 'People are upgrading but in backwards'. 'Once the poor and poverty-stricken children were sometimes used to be abandoned by their own Parents themselves, but day by day it has become very low and rare in cases. But adding to the worst scenario, nowadays children have started abandoning their own Parents. And the notable fact is most of the Parents or old aged people are abandoned by the people who are economically well settled and who are on big positions in the society. It is what I meant we are upgrading but in backwards. We have just shifted from Abandoning Children to Parents. Is this what we somehow call ourselves "upgrading or updating?"

"Learning of practical wisdom in the world begins at the feet of the elders." For every man/woman who achieves something big in his/her life, for sure there will be his/her Parents efforts behind them. It may be physically or mentally. Yet people are neglecting those pure souls who have been their backbones. 'The oldage homes which have been constructed over many places for the purpose of old people, those who become orphan by loosing their children or after their children's death. But in many cases the oldaged homes are filled with old people who have been abandoned or rejected by their own children.

People used to say that they are not abandoning their Parents, they are just making them better by leaving them alone. But leaving them alone would never make their lives better. It will only make their worries, their lonliness their health go worse. They only seek their children to spend time with them, to listen to them, be with them, to care about their goals and needs and to have a chit-chat with them and express their love for them.

Some of the people also used to say like ‘we don’t have much time to take care of our Parents.’ For those who are admitting those statements, what if their Parents had no time to take care of them and abandoned them into an orphanage, when they were infants/babies? For those who are abandoning their own Parents, they become bad examples to their own children.

In future, following the miserable legacy of their Parents, the children will also eventually abandon, those who did abandon their parents so. And now, it is our duty and responsibility to take care of the elderly ones who are abandoned. We need to do something what we could prefer for them. Also they need moral support, care and love. So we need to spend time with them. From child to youth in the society, it is our responsibility to take care of them.

Let us ensure ourselves that we won’t even try to abandon our Parents. For we have the power of changing the tomorrow’s society. Let us keep on giving our love and support to the elders and oldaged people around us. They are our wisdom, guide, inspiration and great source of true and genuine love and real protection.

*“For they are the yesterday’s farmers who planted us for Tomorrow’s society”*

**S. Akilesh Infant**
Montfort Home (Juniorate), Palakurichy.

**Mary our Mother**
**Pray for all the Aged,**
**the Sick, the Rejected,**
**the Unloved and the Lonely...**



# Open to Jesus Christ!

St. Louis Marie Grignion de Montfort has been a great Saint, who always had passion for God and compassion for people. All throughout his life he dedicated his life at the services of the poor and the downtrodden. People came to call him. "The good Father de Montfort!"

Let me tell you of another fact showing 'Montfort loved more from his heart and hands than from his mouth'. One day in a town called Dinan as Montfort passed by he saw a man covered with ulcers lying on the street. The man was in a real bad shape and not clean. Montfort took him on his shoulders and carried him to the Missionaries' quarters, so that he could tale care of him as did 'the Good Samaritan' of the Gospel.

As he reached the front door Montfort knocked and cried out several times. "Open to Jesus Christ"... In that whole - hearted outcry, Montfort expressed clearly that for him, the poor was Jesus Christ Himself. Notice that Montfort did not say "open to someone who reminds me of Jesus Christ!"... He did not even say : "Open for the love of Jesus Christ!"... He said, open to Jesus Christ!".

***Because for him the poor is Jesus***

He who came to open the door was very much astonished to see him carrying a man covered with ulcers. Montfort entered loaded with his Precious Burden. He put the man in his bed and warmed him up as well as he could for the man was shivering with cold. And he took care of his needs. Then he spent the night in prayer.

Yes, during his youth, during the years of his Pastoral service in the General Hospitals and in his life of commitment to the Apostolic mission entrusted to him by Pope Clement XI, Montfort was fully involved in works of corporal mercy: giving food to the hungry, giving water those who were thirsty giving clothes to those who were naked and quenching their Spiritual thirst and healing their body, mind and soul.


He welcomed the strangers, helped the sick and took care of the aged people who had no one to care for them. He involved in his works of Spirituality and mercy: Praying for the living and the dead was one of his important acts of mercy. He touched the hearts and minds of people, wherever he went.

Among the disciples of Montfort, there are the Daughters of wisdom (Montfort Sisters), the Company of Mary (Montfort Fathers), the Brothers of St. Gabriel (Montfort Brothers), many "Associates" and collaborators and many other people who in different places are living Montfort's spirituality and charism.

Let us be Radical Followers of the Gospel Values as Montfort had been!

*"Vive la Montfort!"*

**J. Rishon**
Montfort Home (Juniorate), Palakurichy.



**Open to Jesus Christ!**

# யூபிலி-விழா வாழ்த்துப் பாடல்

வாழ்த்திப் பாடுவோம் இறைவனைப் போற்றிப் பாடுவோம்
நன்றி கூறுவோம் இந்த நல்ல நாளிலே
கடவுள் மட்டும் என்று மாண்ட்போர்ட்டின் வழிநின்று (2)
யூபிலிவிழா கொண்டாடிடும்
அருட்சகோதரர்களை வாழ்த்துவோம்!

***Sparkling Silver Jubilee! Oh Oh Oh!***
***Glorious Golden Jubilee! Oh Oh Oh!***

1. கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல்
   என்ற வார்த்தைப்பாட்டினை ஏற்று
   அன்பு கருணை உள்ளம் கொண்டு
   இறைசித்தம் செயல்படுத்தினீரே!
   தடைகள் தொடர்ந்திடினும் இடர்கள் சூழ்ந்திடினும்
   இறைவன் கரம்பற்றிக் கடந்தீர்
   எம் பள்ளி மாணவர்க்குத் தந்தை தாயாகி
   அரவணைத்து வழி நடத்தினீர்! – வாழ்த்திப் பாடுவோம்

2. தாயின் கருவில் தோன்றும் முன்பே
   எம்மை உமக்கெனத் தெரிந்துகொண்டீரே
   தந்தை வடிவில் அரவணைத்து
   நின் அருளை நிறைவாய்ப் பொழிந்தீரே!
   சேவை இரக்கம் மனம்
   ஞானம் கொடுத்து தினம்
   பணியினைச் சிறக்கச் செய்தீரே!
   இந்த யூபிலி ஆண்டுவரை எம்மைக் காத்து வந்த
   இறையே உமக்கு நன்றி! – வாழ்த்திப் பாடுவோம்

**இயல், இசை: சகோ. அ. சார்லஸ், க.ச.**
புனித லூயி காதுகேளாதோர் மற்றும் பார்வையற்றோர் நிறுவனம்,
அடையாறு, சென்னை.

# HEARTY CONGRATULATIONS!



## Glorious Golden Jubilarian

Rev. Bro. Cyriac Pulickal, sg

## Sparkling Silver Jubilarians



Rev. Bro. Amal Amad, sg



Rev. Bro. Arulappan, sg



Rev. Bro. Innasi Asir, sg



Rev. Bro. George Fernandez, sg



Rev. Bro. Jesu Raja, sg



Rev. Bro. Michael Packiaraja, sg



Rev. Bro. Sebastian Sekar, sg



Rev. Bro. James William, sg

**Prayerful Wishes from MGA, Province of Trichy.**

# Fr. GABRIEL DESHAYES

## Re-founder of Montfort Brothers of St.Gabriel



(Born on 06.12.1767 - Died on 28.12.1841)

Gabriel Deshayes allowed himself to be touched and challenged by the different situations and people. He was a man who saw the reality of people's lives and built projects in response to the needs encountered and based on the needs of the poorest. He refounded and strengthened the congregation of Brothers which Montfort had founded for educational apostolate.

The spirit of Gabriel Deshayes has borne fruit throughout the past 200 years across international congregations on all continents & across a network of initiatives that welcome and assist young people and adults with sensory disabilities or language disordes.

Around the world 5,000 Brothers, Sisters and their congregations & Institutions and lay associates continue to radiate his spirit.

**A GREAT FOUNDER, CO-FOUNDER, INSPIRATION, ADVISOR, PARTNER... INDEED!**